**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.12** **நாள்: 25.01.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது.**

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் பணிபுரியும் பணியார்கள் மற்றும் அலுவலர்களுக்கு பொதுசுகாதாரத்துறை மற்றும் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் மூலம் கண் பரிசோதனை முகாம் 24.01.2018 அன்று ரிப்பன் மாளிகையில் உள்ள அம்மா மாளிகையில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசு, தனியார் மற்றும் தொண்டு நிறுவன கண் மருத்துவமனைகளைக் கொண்டு இலவச கண்புரை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. கண் புரை நோய் தவிர நீர் அழிவினால் கண் நோய் கண்ணீர் அழுத்த நோய் மாறு கண் சிகிச்சை மற்றும் குழந்தை கால பருவ கண் நோய் ஆகியவைகளுக்கும் சமமான முக்கியத்துவம் அளித்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேற்கண்ட அனைத்து நோய்களும் பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப் படுகிறது.

தொண்டு நிறுவன கண் மருத்துவமனைகளான உதி கண் மருத்துவமனை, எம்.என். கண் மருத்துவமனை மற்றும் இந்தியா விஷன் உதவியுடன் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் பணிபுரியும் அனைத்து பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் கண் புரை, கண் நீரழுத்த நோய், கண் பார்வை குறைபாடு, விழித்திரை பாதிப்பு போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

இக்கண் பரிசோதனை முகாமில் மொத்தம் 346 பணியாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர். இப்பரிசோதனையில் பார்வை குறைபாடு உள்ளவர்கள் 252 நபர்களும், கண் புரை குறைபாடு உள்ளவர்கள் 17 நபர்களும், கண் நீரழுத்த நோய் உள்ளவர்கள் 11 நபர்களும், மற்றவை 66 நபர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தொடர் சிகிச்சை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**